**செய்தி வெளியீடு எண்: 500** **நாள்: 16.08.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 14.8.2019 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் அரியலூர் மாவட்டம், வாரணவாசியில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதை உயிரிப்படிவ அருங்காட்சியகத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 4 கோடியே 43 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அருங்காட்சியகம் மற்றும் கலை பண்பாட்டுத் துறை கட்டடங்களை திறந்து வைத்து, 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப் பள்ளி கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

புதை உயிரிப்படிவம் மிகுந்துள்ள உலகளாவிய இடங்களில் அரியலூரும் ஒன்றாகும். இப்பகுதி புவியியல் மற்றும் புதை உயிரிப்படிவவியல் முக்கியத்துவம் வாய்ந்தது. இப்பகுதி கிரேட்டேஷியஸ் மற்றும் குவார்ட்டனரி கால கடல்வாழ் உயிரின புதை உயிரிப்படிவங்களின் தொகுப்புகளைக் கொண்டுள்ளது. இந்த புதை உயிரிப்படிவங்கள் இந்திய புவியியலின் பழங்கால வரலாற்று தகவல்களை வழங்குகின்றன. விரைந்த தொழில்மயமாக்கல் மற்றும் அதன் தாக்கம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, புதை உயிரிப்படிவங்களை பாதுகாக்கும் நோக்கில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 19.12.2012 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் மாநாட்டில் அரியலூரில் புதை உயிரிப்படிவ அருங்காட்சியகம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, அரியலூர் மாவட்டம், வாரணவாசியில் 54 ெஹ்க்டேர் பரப்பளவிலான புதை உயிரிப்படிவங்களைக் கொண்ட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதை உயிரிப்படிவ அருங்காட்சியகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்புதை உயிரிப்படிவ அருங்காட்சியகத்தின் காட்சியமைப்பு, புவியியல் கால வரிசைப்படியும், புதை உயிரிப்படிவங்களின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையிலும், அத்துடன் அதனை பாதுகாக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் 1 கோடியே 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நுழைவுச் சீட்டு விற்பனைக்கூடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, அருங்காட்சியக வெளியீடுகள் விற்குமிடம் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள காணொளி விளக்கக் கூடம்;

கலை பண்பாட்டுத் துறையின் கீழ், திருவண்ணாமலை வட்டம், சமுத்திரம் கிராமத்தில் 424.44 சதுர மீட்டர் கட்டட பரப்பளவில் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவண்ணாமலை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம், அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலை கல்லூரிக்கு 2 கோடியே 55 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கருங்கல்லிலான சுற்றுச்சுவர், மாணவர்களுக்கான தங்கும் விடுதிக் கட்டடம், இரண்டு தொழிற் பயிற்சிக் கூடங்கள்;

என மொத்தம் 6 கோடியே 43 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதை உயிரிப்படிவ அருங்காட்சியகம், அருங்காட்சியகங்கள் மற்றும் கலை பண்பாட்டுத் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

புதுக்கோட்டை வட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட அரசு இசைப் பள்ளிக்கு 314 சதுர மீட்டர் பரப்பளவில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள இசைப் பள்ளி கட்டடத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 11 சொகுசுப் பேருந்துகளைக் கொண்டு அரைநாள் முதல் 14 நாட்கள் வரையிலான 38 வகையான சுற்றுலாக்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பேராதரவுடன் நடத்தி வருகிறது.

இச்சுற்றுலாக்களைத் தவிர குழுவாகச் செல்ல விரும்புகிற சுற்றுலாப் பயணிகளின் தேவைகளை நிறைவு செய்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தேவைக்கேற்ப ஆயத்த சுற்றுலாக்களையும், அரசு ஊழியர்களுக்கான விடுப்புப் பயணச் சலுகைச் சுற்றுலாக்களையும் ஏற்பாடு செய்து வருகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த சேவையை அளிக்கும் வகையில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவி மூலம், 1 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 43 இருக்கைகளுடன் கூடிய புதிய வோல்வோ குளிர்சாதன சொகுசுப் பேருந்து சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.வெல்லமண்டி ந. நடராஜன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., கலை மற்றும் பண்பாட்டுத் துறை ஆணையர் / முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அருங்காட்சியகங்களின் இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.டி. உதயசந்திரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**